# சென்னை மாநகர கன்னட சைனீகர் சமுக சங்கம்

பதிவு எண். 154/2003

எண்.50, (334,2) வால்டாக்ஸ் ரோடு, (அண்ணாபிள்ளை தெரு எதிரில்)

சென்னை – 600 079. போன் : 25291111, 25292040 / செல் : 94446 53643


## நல்லடக்கம்

### தேவையான பொருட்கள்

**1. உடனே தேவையானவை**

| | |
|---|---|
| மாலை | 1 |
| தேங்காய் | 1 |
| கற்பூரம் | ரூ. 2.00 |
| ஊதுபத்தி | 3 பாக்கெட் |
| பூ | 1/2 முழம் |
| வாழைபழம் | 2 |
| வெற்றிலை, பாக்கு | ரூ. 1.00 |

**2. பாடை கட்ட தேவையானவை**

| | |
|---|---|
| 10 அடி நீளத்தில் மூங்கில் | 2 (கை கனத்தில) |
| $2^1/_2$ அடி நீளத்தில் மூங்கில் | 7 (சிறிய கனத்தில்) |
| பச்சை தென்னை மட்டை | 1 |
| கயிறு | 11/2Kg |
| சணல் | 2 கட்டு |
| பூ | 25 முழம் |

**3. வெள்ளைத்துணி 6 மீட்டரில் தேவையானவை**

| | |
|---|---|
| வேஷ்டிக்கு $1^1/_2$மீ அங்குலம் அகல துண்டு | 1 |
| தாவங்கட்டைக்கு 4 அங்குலம் அகல துண் | 1 |
| கோமணத்திற்கு 9 அங்குலம் அகல துண்டு | 1 |
| $1^1/_2$ அங்குலம் அகல துண்டு | 1 |
| கால் கட்டை விரலுக்கு 1 அங்குலம் அகல துண்டு | 1 |
| கை கட்டை விரலுக்கு 1 அங்குலம் அகல துண்டு | 1 |

**4. சுடுகாட்டிற்கு தேவையானவை**

| | |
|---|---|
| வாய் குறுகலான பானை | 1 |
| சிறிய நூல் கண்டு | 1 |
| உப்பு | 5Kg |
| விபூதி (பெரியது) | 3 பாக்கெட் |
| மாவிலை கொத்து | 1 |
| தேங்காய் | 1 |

**5. அபிஷேகத்திற்கு தேவையானவை**

| | |
|---|---|
| திரவிய பொடி | ரூ. 1.00 |
| மாவுப் பொடி | ரூ. 1.00 |
| எலுமிச்சைப் பழம் | 2 |

| | |
|---|---|
| நார்த்தங்காய் | 2 |
| இளநீர் | 2 |
| உத்திராட்சம் | 2 |
| பால் | 200மிலி |
| சந்தனம் | ரூ.2.00 |
| பன்னீர் | 1 பாட்டில் |

**6. பூஜைக்கு தேவையானவை**

| | |
|---|---|
| பூ | 1/2 முழம் |
| வாழைப்பழம் | 2 |
| வெற்றிலை, பாக்கு | ரூ. 1.00 |
| கற்பூரம் | ரூ.2.00 |
| ஊதுபத்தி | 1 பாக்கெட் |
| தேங்காய் | 1 |
| விபூதி (சிறியது) | 1 பாக்கெட் |
| குங்குமம் | ரூ. 1.00 |

**7. இறந்தவரின் மனைவி வீட்டில் (தாய்வீடு) வாங்க வேண்டியவை**

| | |
|---|---|
| சிகப்பு கலர் புடவை | 1 |
| மாலை | 1 |
| பூ | 2 முழம் |
| வாழைப்பழம் | 2 |
| வெற்றிலை, பாக்கு | ரூ. 1.00 |
| தேங்காய் | 1 |
| மஞ்சள் தூள் | 1 டப்பா |
| பச்சரிசி | 1Kg |
| நல்லெண்ணெய் | 200g |
| சீயக்காய் | 1 பாக்கெட் |

**8. உடன் பால் தெளிப்பதாக இருந்தால் சுடுகாட்டிற்கு எடுத்து செல்ல தேவையானவை**

| | |
|---|---|
| பால் | 1 லி |
| நவதானியம் | ரூ.10.00 |
| ஊதுபத்தி | 1 பாக்கெட் |
| அவுல் | 1/4Kg |
| பொட்டுகடலை | 1/4Kg |
| சர்க்கரை | 200g |
| வாழைப்பழம் | 4 |
| வெற்றிலை பாக்கு | ரூ. 1.00 |
| கற்பூரம் | ரூ. 2.00 |
| அகல் | 1 |
| திரிநூல் | 1 |
| நல்லெண்ணெய் | 50g |
| தீப்பெட்டி | 1 |
| நுனி வாழை இலை | 1 |
| பாத்திரம் | 1 (பால் நவதானியம் போட்டு தெளிக்க) |
| தட்டு | 1 (கற்பூரம் ஏற்ற) |

## திருமணம் ஆனவர்கள் ஆண்கள் இறந்தால் செய்ய வேண்டிய முறைகள்

1. இறந்தவுடன் அவரை குளிப்பாட்டி நல்ல துணி கட்டி கிழக்கு அல்லது வடக்கு பார்த்து உட்கார வைக்க வேண்டும். உட்கார வைக்க முடியாவிட்டால் படுக்க வைத்து கால் கட்டை விரல் இரண்டையும், கை கட்டை விரல் இரண்டையும் கட்ட வேண்டும். கழுத்தில் மாலை போட்டு தலைமாட்டில் விளக்கேற்றி வைத்த பிறகு அடக்கம் செய்ய தூக்கும் வரை ஊதுபத்தி ஏற்றி வைக்க வேண்டும். தட்டில் தேங்காய் உடைத்து வைத்து கற்பூரம் ஏற்றி காண்பிக்க வேண்டும்.

2. வசிக்கும் இடத்தில் உள்ள சங்க நிர்வாகிகளுக்கு உடனே தெரியப்படுத்திவிட்டு, உறவினர்களுக்கு தந்தி அல்லது போன் மூலம் தெரியபடுத்த வேண்டும்.

3. அடக்கம் செய்ய போகும் பொழுதும் திரும்பி வரும் பொழுதும் குளிகை இல்லாத நேரம் பார்த்து வரவேண்டும்.

4. வியாழக்கிழமை அல்லது சனிக்கிழமை இறந்தால் கோழிக்குஞ்சு அல்லது கோழி வாங்கி அதன் காலை லேசாக அறுத்துவிட்டு பாடையில் கட்ட வேண்டும்.

5. உத்திராட்சம் இரண்டையும் தனித்தனியாக நூல் கோர்த்து வைக்க வேண்டும்.

6. இறந்தவரை குளிப்பாட்டுவதற்கு முன் மனைவியின் தாயார் வீட்டில் வாங்கி வந்த பொருள்கள் தெரு வாசற்படிக்கு வெளியில் தாம்பாளத்தில் வைத்து வெளியிலிருந்து உள்ளே கொண்டு வந்து இறந்தவரின் அருகில் வைக்க வேண்டும்.

7. கருமம் செய்பவர் முகம் ஷேவ் செய்து கொண்டு குளித்து விட்டு நெற்றியில், கையில் விபூதி பூசிக்கொண்டு இறந்தவரை குளிப்பாட்ட தண்ணீர் எடுத்து வரவேண்டும்.

8. இறந்தவருக்கு எல்லோரும் எண்ணெய் வைத்து சீயக்காய் தேய்த்து குளிப்பாட்ட வேண்டும். அதன்பிறகு மனைவியை இடது பக்கம் ஒரு ஸ்டூலில் உட்கார வைத்து அவருக்கும் எண்ணெய் வைத்து சீயக்காய் தேய்த்து குளிப்பாட்டிய பிறகு கருமம் செய்பவர் கையில் இரண்டு உத்திராட்சத்தை கொடுத்து இடது கை கட்டை விரலில் நூலை சுற்றி உள்ளங்கையில் உத்திராட்சத்தை வைத்து 1. நல்லெண்ணெய் அபிஷேகமும் சீயக்காய் பொடி தேய்த்து நன்றாக தண்ணீர் ஊற்றி கழுவ வேண்டும். 2. திரவிய பொடி சிறிதளவு ஒரு டம்ளரில் போட்டு கரைத்து உத்திராட்சத்துக்கு அபிஷேகம் செய்து ஊதுபத்தி காண்பிக்க வேண்டும். தண்ணீர் ஊற்றி கழுவ வேண்டும். 3. மாவுப்பொடி 4. எலுமிச்சைபழம் 5. நார்த்தங்காய் 6. இளநீர் 7. பால் 8. சந்தனம் 9. பன்னீர் முறையாக அதேபோல் ஒவ்வொரு அபிஷேகத்திற்கும் ஊதுபத்தி காண்பித்த பிறகு தண்ணீர் ஊற்றி சுத்தம் செய்ய வேண்டும். அபிஷேகம் முடிந்தவுடன் உத்திராட்சத்துக்கு விபூதி போட்டு பிறகு சந்தனத்தில் பொட்டு வைத்து குங்கும பொட்டு வைத்து கருமம் செய்பவர் வலது கையில் ஒரு உத்திராட்சத்தை கட்ட வேண்டும். ஒரு உத்திராட்சத்தை இறந்தவர் கழுத்தில் உத்திராட்சத்தை கட்டிவிட வேண்டும்.

9. 6 மீட்டர் துணியில் கிழித்த 9அங்குலம் அகல துண்டுடன் $1^1/_2$ அங்குலம் துணியை சேர்த்து அதை கோமணமாக இடுப்பில் கட்ட வேண்டும். $1^1/_2$ மீட்டர் துணியை பின்பக்கம் இருவர் தூக்கிக் கொண்டு வேஷ்டியாக கட்டிவிட வேண்டும். 1அங்குலம் அகல துண்டை எடுத்து கை கட்டை விரலையும், கால் கட்டை விரலையும் கட்ட வேண்டும். மீதி உள்ள துணியை ஒரு பக்கம் குறைவாகவும் ஒரு பக்கம் நீளமாகவும் வைத்து போர்த்தி விட வேண்டும். விபூதியை குழப்பி இறந்தவரின் நெற்றியில் வைக்க வேண்டும். பிறகு

சந்தனத்தில் பொட்டு வைத்து குங்கும பொட்டும் வைக்க வேண்டும். கழுத்தில் மாலை போட வேண்டும். 4 அங்குலம் அகல துணியை தாவாங்கட்டையின் மேல் வைத்து உச்சந்தலையில் இழுத்து கட்ட வேண்டும். பிறகு ஒரு தட்டில் பூ, பழம், வெற்றிலை, பாக்கு, வாழைப்பழம், தேங்காய் உடைத்து வைத்து கற்பூரம் காண்பித்து விட்டு அவரை சுற்றி வர வேண்டும்.

10. வாய் குறுகலான பானையில் நூல் சுற்றி பாதி அளவு தண்ணீர் ஊற்றி மாவிலை கொத்து வைத்து அதில் தேங்காய் வைக்க வேண்டும்.

11. இறந்தவரை தூக்கும் பொழுது கால் தெருவாசல் பக்கமாக வைத்து தூக்கிக் கொண்டு வந்து கட்டிய பாடையின் மேல் வைத்து ஒரு பக்கம் அதிகமாக உள்ள துணியை இழுத்து போர்த்தி தலைமாட்டிலிருந்து கால்வரை நன்றாக சணலால் கட்ட வேண்டும். கழுத்தில் மாலை போட்டு, மாலைகளை மேலே போட்டு பிறகு சுடுகாட்டிற்கு எடுத்து செல்ல வேண்டும்.

12. நூல் சுற்றிய பானையை கருமம் செய்பவர் எடுத்துக்கொண்டு முன்பாக செல்ல வேண்டும்.

13. சுடுகாட்டில் வெட்டி இருக்கும் குழியை மூன்று முறை சுற்ற வேண்டும். சுற்றிய பிறகு வடக்கு பக்கம் அதை இறக்கி வைக்க வேண்டும்.

14. குழிக்குள் 5கிலோ உப்பையும், விபூதி (பெரியது) 2 பாக்கெட்டையும் போட வேண்டும்.

15. பாடையிலிருந்து அவரை இறக்கி குழியில் வைத்த பிறகு 1 பாக்கெட் விபூதியை மண்ணில் கலந்து ஒவ்வொருவரும் மூன்று முறை சிவன் பெயரை சொல்லி அவர் தலையில் விழும்படி போட வேண்டும். (விபூதி கலந்த மண்ணையும் காசையும் எடுத்துக் கொண்டு காசை மேலேயே போட்டுவிட்டு, அவர் தலையில் மண் விழும்படி போட வேண்டும்).

16. அவர் போர்த்தி உள்ள துணியை இழுத்து முகத்தை மூடிவிட்டு அவர் உடல் மண்ணில் மூடும் வரை நாமே (சமூகத்தினரே) மண்ணை இழுத்து விட வேண்டும். பிறகு வெட்டியானிடம் கொடுத்து மூட சொல்ல வேண்டும்.

17. அவர் தலை மாட்டில் அந்த பானையை வைத்து அங்கு ஒரு குச்சியை ஊன்றி ஒரு மாலையை குச்சியின் மீதும் பானையின் மீதும் இருக்கும்படி போட வேண்டும். அதன் கீழ் மண்ணை கையால் மட்டப்படுத்தி நுனி இலையை போட்டு அதில் அவல், கடலை, சர்க்கரை, வெற்றிலை, பாக்கு, வாழைப்பழம் மற்றும் கொண்டு சென்ற பொருள்களை வைக்க வேண்டும். அகலை தலைமாட்டில் வைத்து எண்ணெய் ஊற்றி, திரி போட்டு ஏற்றி வைக்க வேண்டும். மறுபக்கம் ஊதுபத்தியை தலைமாட்டில் ஏற்றி வைக்க வேண்டும். பானையில் உள்ள தேங்காயை எடுத்து உடைத்து வெற்றிலை பாக்கின் மேல் வைத்து தீபாராதனை காண்பிக்க வேண்டும். பிறகு எல்லோரும் சுற்றி வர வேண்டும்.

## உடன் பால்

18. கால் மாட்டில் அந்த மண்ணை மட்டப்படுத்தி ஒரு பாத்திகட்டி ஒரு பாத்திரத்தில் நவதானியம், பால் ஊற்றி சில்லரைக் காசுடன் அந்த பாலை மூன்று முறை அந்த பாத்தியில் எல்லோரும் தெளிக்க வேண்டும். பிறகு கற்பூரம் ஏற்றி பால் தெளித்த இடத்திற்கு தீபாராதனை காட்டி கும்பிட்டு விட்டு ஒரு முறை சுற்றி வந்து திரும்பிப் பார்க்காமல் செல்ல வேண்டும். வீட்டிற்குள் செல்வதற்கு முன் குளித்து விட்டு ஆலாத்தி எடுத்த பிறகு வாசலின் உள்ளே வைத்திருக்கும் தண்ணீரில் காலை கழுவிக் கொண்டு உள்ளே நேராக பூஜை அறையில் சாமியை கும்பிட்டு விட்டு வெளியில் வந்து எல்லோரையும் பார்த்து கை எடுத்து கும்பிட்டு சாப்பிட்டு விட்டு செல்லுமாறு கேட்டுக் கொள்ள வேண்டும்.

19. மறுநாள் எண்ணெய் தேய்த்து குளிக்க வேண்டும்.

## திருமணமான பெண் இறந்தால்

ஆண்களுக்கு செய்கின்ற முறைப்படி உத்திராட்சத்தை கழுத்தில் கட்டிய பிறகு கொண்டு வந்த புடவையை, கால் கட்டை விரலுக்கும், கைகட்டை விரலுக்கும், வாய்கட்டுக்கும் புடவையிலிருந்து கிழித்துக் கொண்டு மீதமுள்ள புடவையை அவருக்கு கட்டிவிட்டு பொட்டு வைத்து, மாலை போட்டு, தலையில் பூ வைத்து, பித்தளையில் ஒரு தாலி வாங்கி அதை தாலிக்கயிற்றில் கோர்த்து கணவரே அதை அவர் கழுத்தில் கட்டிய பிறகு கருமம் செய்பவர் கற்பூரம் காண்பித்த பிறகு கணவரை விட்டே பழைய தாலியை கழட்டி கற்பூரம் காட்டிய தட்டில் வைத்து இறந்த மனைவி கையில் தட்டை வைத்து அந்த தட்டை கணவர் வாங்கிக் கொள்ள வேண்டும்.

## மோட்சதீபம்

மோட்சதீபத்தன்று பூஜை செய்த பிறகு மாவிளக்கு போட்டு வைத்து இருப்பதை கையில் எடுத்துக்கொண்டு மூன்று முறை வெண்ணெய் போட வேண்டும். பிறகு பக்கத்தில் உள்ள கோயிலில் சென்று அர்ச்சனை செய்து விட்டு திரும்பி வந்து வாசலில் நின்ற பிறகு ஆரத்தி எடுத்து உள்ளே சென்றவுடன் கிழக்கு பார்த்து உட்கார வைத்து முறைப்படி வரிசையாக சோமன் (வேஷ்டி, துண்டு, சட்டை, பேன்ட்) போற்ற வேண்டும்.